**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை :- திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 05 ம் நாள்

**இடைநிலை மனு எண். 605/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 75/2024**

கிருஷ்ணவேணி ..... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

**// எதிர்//**

1. ராஜேந்திரன்

2. ரவீந்திரா ..... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

3. முத்துக்கிருஷ்ணன் ...... எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செல்வராஜ், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவின் அசல் வழக்கு கடந்த 13.09.2024 ம் தேதியில் மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கணவர் பிழைப்பின் நிமித்தம் வெளிநாடு சென்றுவிட்டார். மனுதாரருக்கு குழந்தை பிறந்து 6 மாதம் ஆன நிலையில் மனுதாரருக்கு எதிராக வாதிகள் பொய்யான வழக்கினை தாக்கல் செய்துவிட்ட நிலையில் மேற்படி வழக்கில் மனுதாரர் நேரடியாக ஆஜராகி மனுதாரர் தரப்பு வழக்கறிஞரிடம் தாவா சொத்து குறித்த விபரத்தை தெரிவிக்க இருந்த நிலையில் மனுதாரர் கைக்குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்திக்க முடியாத சூழ்நிலை மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 13.09.2024 ம் தேதி மனுதாரருக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ மனுதாரர் இருக்கவில்லை. ஆகவே கடந்த 13.09.2024 ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்திக்கொள்ள உத்திரவாக வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாத பட்சத்தில் மனுதாரருக்கு அளவிட முடியாத இன்னலும், இழப்பும் ஏற்பட்டுவிடும். மனுதாரர் தரப்பில் நல்ல கட்சி உள்ளது. எனவே மனுதாரருக்கு எதிராக கடந்த 13.09.2024 ம் தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை ஆகும். 1ம் பிரதிவாதி சட்டப்படி வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. 1ம் பிரதிவாதியினுடைய கணவர் பாரத் என்பவர் தற்சமயம் சிங்கப்பூரில் வசித்து வருகிறார். அவர் சிங்கப்பூரில் வசித்து வரும் நிலையில் யாரோ

தூண்டுதலின் பேரில் 1ம் பிரதிவாதி நீண்ட காலமாக வாதிகள் அனுபவத்தில் உள்ள சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகளின் தொடர் விவசாயத்தினை தடை செய்யும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார்.

1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் தாக்கல் செய்துள்ளபோல 1ம் பிரதிவாதியின் கணவர் பாரத் என்பவர் வெளிநாடுகளில் சம்பாதித்த பணத்தை கொண்டு 2ம் வாதியின் பெயரில் 14.03.2011ம் தேதி சொத்து வாங்கியதாக கூறியிருப்பது உண்மையல்ல. மேற்படி சொத்தானது ஆவண எண்.793/2011 4 மா, 41 குழியானது நஞ்சை தாவா சொத்துக்கள் வாதிகளின் சுய உழைப்பின் பேரில் வாங்கப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவரது கணவரோ சட்டப்படி உரிமை கோருவதற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லை.

மேற்படி சொத்து 1ம் பிரதிவாதியின் கணவர் உழைப்பால் வாங்கப்பட்டிருந்தால் அப்போதே அவர் பெயரில் பத்திரம் பதிவாகியிருக்க வேண்டும். தற்சமயம் வழக்கிற்காக 1ம் பிரதிவாதியின் கணவரால் வாங்கப்பட்டதாக 1ம் பிரதிவாதி தவறாக தாக்கல் செய்துள்ளார். அந்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் வாதிகளை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது.

1ம் பிரதிவாதி வாதிகள் சொத்தை பொறுத்து கிராம பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 04.03.2024ம் தேதி ஓர் பாகப்பிரிவினை ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக சொல்லியிருப்பது உண்மையல்ல. சொத்தைப் பொறுத்து இதுவரை எந்தவிதமான பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சொத்தின் அனுபவம் தொடர்ந்து வாதிகள் வசமே உள்ளது. வாதிகள் தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி கணவர் இல்லாத நேரத்தில் வாதிகளுக்கு தொந்தரவு செய்து வயதான வாதிகளை கஷ்டத்திற்குள்ளாக்கி அவர்கள் மீது

பல வழக்குகளை தாக்கல் செய்து வருகிறார். மேற்படி சொத்தைப் பொறுத்து எந்தவிதமான பாகப்பிரிவினையும் ஏற்படாத நிலையில் 1ம் பிரதிவாதி அவர் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானைவையாகும்.

1ம் பிரதிவாதி தொடர்ந்து வாதிகளிடம் பிரச்சனை செய்து அது சம்மந்தமாக வடுவூர் காவல் நிலையம் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஆகியோரிடம் புகார் மனு தாக்கல் செய்து மேற்படி புகார் தொடர்பாக வாதிகள் விவசாயம் செய்வதில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என எச்சரித்து கண்டித்து அனுப்பி வைத்துள்ளார்கள். இதையும் மீறி 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு பிரச்சனை செய்து வந்ததால் வாதிகள் நீதிமன்றத்தை அணுகி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த மனு சட்டப்படிக்கும், சங்கதிகள் படிக்கும் அனுமதிக்கப்பட வேண்டிய மனுவாகும். வாதிகள் மேற்படி சொத்தில் தொடரந்து விவசாயம் செய்து தற்சமயம் நடவுப்பணியும் முடித்துள்ளார்கள். இந்நிலையில் மனுதாரர் பல பொய்யான சங்கதிகளை தெரிவிதது வாதிகளுக்கு தொந்தரவு கொடுத்து அவர்கள் சாகுபடி செய்து வரும் நிலத்திற்கும் இடையூறு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

ஆகவே வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளையும், வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளையும் பரிசீலனை செய்து 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை தள்ளுபடி செய்து, தொடர்ந்து வாதிகள் விவசாயம் செய்து வருவதில் 1ம் பிரதிவாதி எந்தவித இடையூறும் செய்யாமலிருக்க 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் 1ம் எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்கள்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u> :-**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது, தாவா சொத்துக்களின் வாதிகளின் அமைதியான அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வரும் தாவா சொத்துக்களில் இடையூறு ஏற்படுத்தும் விதமாக பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ அத்துமீறி பிரவேசிப்பதோ, கட்டுமான பணிகள் செய்வதோ, நிலவியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவதோ, கம்பி வேலி அமைப்பதோ, விவசாய பணிகளுக்கு இடையூறு செய்வதோ போன்ற எவ்வித தடை தகராறுகளும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டு பிரதிவாதிகள் ஆஜராகாததால் கடந்த 13.09.2024 ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** இந்நிலையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் கடந்த 13.09.2024 ம் தேதியன்று மனுதாரர் கைக்குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்திக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அன்றைய தினத்தில் மனுதாரரால் ஆஜராக இயலாமல் போய் உள்ளது. அதன் பிறகு மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்தித்து கேட்டபோது மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது அசல் வழக்கை மேல் நடத்தக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளதக்கதாக உள்ளது. இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதால் நீதியின் நலன் கருதி நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**5.** மனுதாரர்கள் வருகின்ற 03.01.2025 அன்று எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/- செலுத்தி வைக்க வேண்டும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டதிலிருந்து 15 தினங்களுக்காக (03.01.2024) எவ்வித காலதாமதமின்றி வழக்கை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**6) முடிவில்,** மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ கடந்த 03.01.2025ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 03.01.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 05 ம் நாள்

**இடைநிலை மனு எண்.605/2024-ல்**

**அசல் வழக்கு எண்.75/2024**

திருமதி.கிருஷ்ணவேணி, வயது 26, க/பெ.பாரத், இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு.இலாகா.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

1. திரு.ராஜேந்திரன், வயது 58, த/பெ.கோவிந்தசாமி, இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.
2. திரு.ராஜேந்திரன், வயது 58, த/பெ.கோவிந்தசாமி, இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.

...... எதிர்மனுதாரர்/வாதிகள்

3. திரு.முத்துகிருஷ்ணன், வயது 40, த/பெ.ராஜேந்திரன், இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.

.... எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி

இம்மனுவின் அசல் வழக்கு கடந்த 13.09.2024 ம் தேதியில் மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 04.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 06.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செல்வராஜ், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ கடந்த 03.01.2025 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 03.01.2025.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 03.01.2025.

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 19 ம் நாள்

**இடைநிலை மனு எண். 605/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 75/2024**

திருமதி.கிருஷ்ணவேணி, வயது 26, க/பெ.பாரத், இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு.இலாகா.

.... மனுதாரர்/பிரதிவாதி

// எதிர்//

1. திரு.ராஜேந்திரன், வயது 58, த/பெ.கோவிந்தசாமி, இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.
2. திரு.ராஜேந்திரன், வயது 58, த/பெ.கோவிந்தசாமி, இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.

...... எதிர்மனுதாரர்/வாதிகள்

3. திரு.முத்துகிருஷ்ணன், வயது 40, த/பெ.ராஜேந்திரன், இந்து, வசிப்பிடம், நடுத்தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டி.மு. இலாகா.

.... எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி

இம்மனுவின் அசல் வழக்கு கடந்த 13.09.2024 ம் தேதியில் மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 04.12.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 06.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செல்வராஜ், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2025 ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.